2. நடைமுறைக் கேள்வி.

டிசம்பர் 2-ம் தேதிய அவை நடவடிக்கைக் குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்புவது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Yesterday the Hon. Deputy Speaker stated that he would give a ruling with regard to the subject-matter which we raised as point of order. I do not know whether he is going to give his ruling now. Before he gives his ruling, I want to inform him that in the Lok Sabha an assurance has been given by the Central Government to the Members of the Parliament that the entire proceedings that took place on 2nd December, have been called for from the State Government. So, I want to know from the Hon. Chief Minister whether the Central Government have called for such particulars from the State Government. Also, whether it is a fact that the State Government are preparing such particulars and if so, whether it is a fact that they are going to prepare them in such a way that whatever has been edited by the Deputy Speaker and the Hon. Chief Minister would be sent or the entire proceedings..........

THIRU S. KANDAPPAN : Sir, on a point of order. The hon. Member has used the expression 'edited by the Deputy Speaker..........'

MR. DEPUTY SPEAKER : 'Edited by the Deputy Speaker' என்று சொல்வது சரியல்ல.

It is not proper.

DR. H. V. HANDE : Sir, My point is....

THIRU S. KANDAPPAN : Sir, this is a very serious thing and it should be expunged.

MR. DEPUTY SPEAKER ; I want the Hon. member to explain the meaning of " edited by the Deputy Speaker ".

டாக்டர் எச். வி. ஹாண்டே : டெபுடி ஸ்பீக்கர் வேண்டுமென்று அந்த நோக்கத்தில் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை.

What I say is that there are certain portions which may be considered as matters demanding expunction by the Deputy Speaker. The Deputy Speaker had instructed the Press the other day that certain portions wer eexpunged. So, we would like to know whether the entire proceedings that took place on 2nd December have been tape-recorded and if so, we want to know which portion had been expunged. I am making it clear that I am not casting any aspersion on the Deputy Speaker. I only want to point out that everyone agreed that on 2nd December....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் சில முடிவுகளை அவர்களாகவே எடுத்துக்கொண்டு விளக்குகிறார்கள். " எவ்வரிபடி " என்றால் என்ன அர்த்தம் ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேப்பர்ஸ்........................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேப்பர்ஸ் என்றால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? தினத் தந்தி, மாலைமுரசு, முரசொலியில் போடவில்லை. எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? நீங்கள் பேப்பர்களை ஆதாரமாகக் காட்டுவது முறையல்ல. The hon. Member should not come to a decision himself There was no parallel House. Only one House was there.

Dr H. V. HANDE : That is your claim.

Thiru J. JAMES : That is our claim.

Mr. DEPUTY SPEAKER : Why are you getting impatient, Dr. Hande? You should not mislead the House.

Dr. H.V. HANDE : I am not misleading.

Mr. DEPUTY SPEAKER : You are misleading.

Thiru J. JAMES; Actually parallel proceedings took place, we were parties to parallel proceedings.

(Thiru N. Ganapathy and Thiru M. Surilivel rose.)

Thiru N. GANAPATHY : Only the proceedings presided over by you, Sir, are valid.

Mr. DEPUTY SPEAKER : I do not want parallel orations here. This is parallel House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதைப் பற்றி விளக்கமாக ஹாண்டே அவர்களும் பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் பேசியாகி விட்டது. அதற்குப் பிறகு தங்களுடைய ரூலிங் கொடுத்த பிறகு ரூலிங்கை எதிர்த்து வெளி நடப்புச் செய்தாகி விட்டது. மறுபடியும் இந்தப் பிரச்சினை கிளப்பப்படுவது முறையல்ல. அன்றையதினம் நடைபெற்ற நடவடிக்கைகள் உடனடியாக கவர்னர் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல அவர்கள் குறிப்பிட்டது போல் பார்லிமெண்டில்
....

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர்...............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லையாது. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் இப்போது இங்கே நடைபெறுகின்ற ஒரு விஷயத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: Are you the chair ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சேருக்குச் சொல்லுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. பேரவையினுடைய துணைத் தலைவருக்குச் சொல்லுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது.

(திரு. எ. ஆர். பெருமாள், டாக்டர் எச். வி. ஹாண்டே இருவரும் ஒரே சமயத்தில் பேச முயன்றனர். மற்றும் பல உறுப்பினர்கள் குறுக்கிட்டனர்.)

Mr. DEPUTY SPEAKER: Please sit down.

Thiru R. PONNAPPA NADAR: The hon. Member Dr. Hande may be allowed to raise his point of order.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சொல்லுவதைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். நான் சொல்லுவதைக் கேட்கக் கூடாதா? தலைமை சொல்லுவதைக் கேட்கக் கூடாதா? பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் என்ன என்பதைப் பற்றி நான் ஒரு விளக்கம் கொடுத்த பிறகு நீங்கள் மேற்கொண்டு பேசலாம். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும். முதலமைச்சர் உங்கள் சார்பில் பதில் சொல்லுவார்.

Rule 83 relates to 'point of order'. According to that rule any Member may at any time submit a point of order for the decision of the Speaker. There is no bar. But a point of order may be raised in relation to the business before the House at the moment. That is the fundamental point. The hon. Member is not raising a point of order concerning the business of the House at the very moment.

There is a proviso to that rule. It says:

"Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order in or arrangement of business before the House."

இப்போது நீங்கள் சொல்லுகின்ற பாயின்ட் ஆப் ஆர்டர் இதன்படி வருமா ? நீங்கள் சொல்லுவது பாயின்ட் ஆர்டர் அல்ல. பயின்ட் ஆப் ஆர்டர் சுருக்கமாக இருக்க வேண்டுமென்பது ஜெனரல் கன்வென்ஷன். நம்முடைய பேரவையில் பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது குறைந்தது முக்கால் மணி நேரம் இருக்கிறது. அதுவே ஆர்டர் அல்ல. பாயின்ட் ஆப் ஆர்டர் சுருக்கமாக இருக்க வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பும்போது பேரவை என்ற ஒன்று நடப்பதை ஏற்றுக் கொள்ளுகிறீர்கள். நடந்து கொண்டிருக்கும் பேரவைக்கு ஒரு தலைமை இருப்பதை ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். அந்தத் தலைமையை ஏற்றுக் கொள்ளுகிற நேரத்தில், பேரவை நடப்பதை ஏற்றுக் கொள்ளுகிற நேரத்தில், இந்தப் பேரவைக்கு என்று எழுதிவைக்கப்பட்டிருக்கின்ற விதி முறைகளை ஏற்றுக் கொண்டதாகக் கருதுகிறேன். அப்படிப்பட்ட நேரத்தில் பேரவையில் இன்னின்ன நடந்தது என்று நீங்களே முடிவு செய்து கொண்ட முடிவுக்கேற்ப பேசுவதை பேரவைத் தலைமையோ, இந்தப் பேரவையோ எப்படி ஏற்றுக் கொள்ளும் ? இரண்டாம் தேதி "பாரலல் ஹவுஸ்" நடந்தது என்பது உங்கள் கருத்து.....

டாக்டர் எச் வி. ஹாண்டே : நான் அதைப் பற்றிப் பேசி முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசும்போது அளவுக்கு மீறி பொறுமையோடு கேட்டுக் கொண்டிருக்கிறேன். பாரலல் ஹவுஸ் நடந்தது என்று பத்திரிகையில் வந்தது என்று சொன்னீர்கள். பத்திரிகைகளில் வந்ததை ஆதாரமாக சொல்லக்கூடாது. அது நிலையான ஆதாரம் அல்ல. பத்திரிகைகள் அரசியல் கருத்துக்களை தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கேற்றபடி வெளியிடும். பாரலல் ஹவுஸ் நடந்தது. இந்த தலைமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்தோடு வெளி நடப்புச் செய்திருக்கிறீர்கள். இன்று மீண்டும் வந்திருக்கிறீர்கள். அந்த ஜனநாயக மரபைப் பாராட்டுகிறேன். கருத்து வேறுபட்டு வேகமாக பேசும்போது சில முடிவுகளை வேகமாக அறிவித்து விடுகிறீர்கள். "மத்திய அரசாங்கம் கேட்டிருக்கிறீர்களா ? மாநில சர்க்கார் என்ன பதில் அளிக்கப் போகிறது" என்று கேட்டு "பாரலல் ஹவுஸ்" நடந்ததாக உங்கள் முடிவாக அறிவிக்கும்போது இந்தப் பேரவை இப்போது நடப்பதையே ஏற்றுக்கொள்வதாக இல்லை என்ற நிலை ஏற்படும். அப்படி நீங்கள் பேசுவது இப்போது இருக்கும் சட்ட விதிமுறைகள் உயிரோடு இருப்பதாகக் கருதுகிறீர்களா இல்லையா என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இங்கு நடக்கின்ற சபையின் நடவடிக்கைகள் அவ்வளவும் மதிப்புள்ள நடவடிக்கைகளாக பொது மக்கள் பார்வையில், தாங்கள் குறிப்பிடுகின்ற பத்திரிகைகளின் பார்வையில் எதிர்காலத்தில் வருகின்ற பேரவையின் நடவடிக்கைகளுக்கு முன் மாதிரியாக அமைய வேண்டுமென்ற முறையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் அருள்கூர்ந்து இதனைக் கருத்தில் கொண்டு பேச வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய கருத்தைச் சொல்லவில்லை. அந்தக் கருத்திற்குள் போகவில்லை. பத்திரிகைகளில் அப்படி வெளியிடப்படுகிறது. அப்படி நடந்ததாக பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

The papers have published it Normally what will happen if the papers publish something contrary to the decision of the Chair, contrary to the wishers of Chair? What would the House do then? The House would normally direct action against the papers that have published them. To that extent all are agreed.

(Thiru V. Krishnamoorthi : You can raise a privilege issue against the papers.)

My submission is in this House, quite a large number of persons may be of the opinion that parallel Houses did not take place. That is a different point. It is upto those persons who are convinced that parallel Houses did not take place that only the Deputy Speaker ruled the House from 12' O Clock on 2nd December 1972 (interruption) *Suo Moto* from the Chair itself it is possible to bring privilege issue against the papers. The situation now has gone beyond the Deputy Speaker and beyond the House. The All-India Radio, Press have all published it. When the report is going to be sent by the Deputy Speaker, the House would like to know whether the Deputy Speaker would take the House into confidence. What sort of report is the Deputy Speaker going to send or the Chief Minister is going to send. Because you yourself have said that the House is supreme, the House should be taken into confidence. I am asking the Deputy Speaker in all humility, with all submission, with faith in democratic principles, what sort of report he is going to send. That is one point.

The Hon. Chief Minister said yesterday that the "oozhal" charges have not been published. Today we have got information that one party, the Communist Party has published it. Without waiting for reply from Prime Minister, the Chief Minister can lay a copy of the charges on the table of the House. One party has published it.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று தெரியவில்லை. எந்த விஷயம் நடைபெற்று அதற்கு அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை கிளப்புகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு பேச்சே, ஒரு சொற்பொழிவே நடத்துகிறார்கள் ஒவ்வொரு முறையும். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து சொற்பொழிவே நடத்துகிறார். நாங்கள் ஆளும் கட்சியினர் பெரும்பான்மையினராக இருக்கிறோம். ஆகவே பெருந்தன்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்ற வகையில் இந்த மன்றத்தின் மரபு, பெயர் கெடாதபடி நடந்துகொள்வது இளிச்சவாய்த்தனமாகக் கூடாது. அது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றையதினம் ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயரில் கிட்டத்தட்ட இரண்டேமுக்கால் மணி நேரத்திற்கு மேலாக இங்கு விவாதம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இன்றும் அதேபோல் ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயரால் விவாதம் அனுமதிக்கப்படுவது முறையல்ல. ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயரால் இரண்டொரு விஷயங்களை அவர்கள் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து இங்கு சபை நடவடிக்கைகளை அனுப்புமாறு என்னைப் பொறுத்த வரையில் எந்தக் கடிதமும் வரவில்லை. பத்திரிகைகளில் வந்த செய்திதான். ஒருவேளை தங்களுக்கு வந்திருந்தால், பேரவை அலுவல்களை பேரவைத் தலைவர் என்ற பொறுப்பில் நடத்திக் கொண்டிருக்கும் தாங்கள் அதை அறிவிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையில் அறிக்கை கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள் ஊழல் புகார்பற்றி. இதிலிருந்து அவர்கள் ஜனாதிபதியை நம்பி, பிரதமரை நம்பி அவர்கள் ஏதோ இங்கு ஒரு விசாரணை கமிஷன் போடுவார்கள் என்று இதுவரையில் சொல்லிக் கொண்டிருந்துவிட்டு இன்றைக்கு அவர்கள், அவர்களாகவே முன்வந்து பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது பத்திரிகைகளில் வந்திருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை கம்யூனிஸ்ட் கட்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற ஹாண்டே அவர்கள் அதைத் தெரிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் காலையில் நான் பார்த்த ஹிந்து பத்திரிகை, இந்தியன் எக்ஸ்பிரஸ், காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான ஏடாக இருக்கிற நவசக்தி பத்திரிகை, தினமணி ஆகிய எந்தப் பத்திரிகையிலும் அந்தப் புகார் பட்டியல் பற்றிய எந்தத் தொகுப்பும் வந்ததாகத் தெரியவில்லை. நான் கூறியிருப்பது, பிரதமர் அவர்கள் எனக்கு அனுப்பி வைத்திருக்கிற அந்தப்புகார் பட்டியல் குறித்து நான் அவர்களுக்கு அது சம்பந்தமான கருத்துக்களைக் கூறவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் பிரதமர் அவர்களிடத்தில் இன்றையதினம் கேட்கச் சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்துக்களை நாம் பிரதமருக்கு அளித்துவிட்டு அவர்கள் அனுப்பி வைத்த புகார் பட்டியலையும் அதற்கு நம் அமைச்சரவை சார்பில் அளித்திருக்கிற பதில்களையும் இந்த அவையில் வைப்பதற்கு பிரதமரின் சம்மதத்தை நான் கோரியிருக்கிறேன். நேற்றையதினம் ஹாண்டே அவர்களும், பொன்னப்ப நாடார் அவர்களும் பேசியதையும் குறிப்பிட்டு அதை வலியுறுத்தி அவர்களுடைய சம்மதம் எனக்குத் தேவை என்று கேட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகைகளுக்கு அதைத் தரப் போவதாக நேற்றையதினம் அறிவித்திருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. பத்திரிகைகளில் விஷயங்கள் வெளிவரவில்லை. அது என் வரவில்லை எனபது எனக்குத் தெரியும். ஜனாதிபதியிடம் இரகசியமாக இருக்க வேண்டும் என்று கொடுத்த பட்டியலை அவர்களே வெளியிடலாம் என்று வந்த பிறகு பிரதமர் அவர்கள் இந்தச் சட்டசபையில் அந்தப் புகார் பட்டியலையும் நாங்கள் அளிக்கிற பதில்களையும் வைக்க சம்மதம் தருவார்கள் என்று கருது

கிறேன். இந்த அவையில் வைப்பதற்கு பிரதமரின் சம்மதம் தேவையா, இதுதான் மாநிலச் சுயாட்சியா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்கக் கூடும். மாநிலச் சுயாட்சியில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த வகையில் கேட்கக் கூடும். பிரதமரிடம் அனுப்பப் பட்டிருக்கும் புகார் பட்டியல், அங்கு எந்தமாதிரி எந்த அளவு இரகசிய மாக அளித்தார்களோ அதேபோல் அவர்கள், பிரதமர் என்னிடம் அனுப்பிப் பதில் கேட்டிருப்பதால் அது முறையாக இருக்காது, மரபாக இருக்காது, நாகரீகமாக இருக்காது, அவர்களை மீறி, கேட்காமல் வைப்பது நன்றாகயிருக்காது என்பதற்காக பிரதமரிடத்தில் அதுபற்றிய சம்மதத் தைக் கேட்டிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இது கான்ஃபிடன்ஷியல் என்று பிரதமர் இந்த அமைச்சரவைக்கு அனுப்பியிருக்கிறார்களா? அதல்லா மல் வெறும் ரிமார்க்ஸ்க்கு மட்டும் அனுப்பியிருக்கிறார்களா என்ற விவரத்தையும் இப்போது சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது மிகவும் இரகசியம். மெத்த இரகசியம். இது வெளியில் போனால் பைல்களை மாற்றிவிடுவார் கள் என்று சொன்னவர்களிடம்தான் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர் கள் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்சினை ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல என்பதை தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்சினையையும், டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்சினையையும் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத் திருக்கும் நம்பிக்கைத் தீர்மானம் அல்லது எதிர்கட்சியினர் கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது தெளிவாக விவாதித் திருக்கலாம். மிகவும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று மூன்று பேரவை உறுப்பினர்கள் இங்கு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கக்கூடிய அளவிற்கு நாட்டிலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது என்று சொன்னவர் கள், அதிலும் குறிப்பாக டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற பெயரால் பேரவையின் இவ்வளவு நேரத்தை அவர் கள் எடுத்திருக்க வேண்டாம் என்று கருதுகிறேன். இந்தப் பேரவையைப் பொறுத்த வரையில் மத்திய அரசிடமிருந்தோ அல்லது ஜனாதிபதியிட மிருந்தோ அல்லது பிரதமரிடமிருந்தோ அல்லது சபாநாயகர், பாராளு மன்றத் தலைவர் அவர்களிடமிருந்தோ ஒரு குறிப்பும் வரவில்லை என பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.